### என் தமிழினத்தை இரண்டாந் தரமாக்கும் எந்தச் சமயத்தையும், கடவுளையும் நான் ஏற்கமாட்டேன்


# இந்தச் சிலைக்குப் பின்னால் - புகழ் பாடுகிற தமிழினத்தின் புது வரலாற்றைப் பார்க்கிறோம்!

## 1975-ல் கலைஞர் சிலை திறப்பின்போது குன்றக்குடி அடிகளார் இன உணர்ச்சி முழக்கம்!

**சென்னை அண்ணாசாலை யில் 21.9.1975 அன்று தமிழ் நாடு முதல்வர் கலைஞர் அவர்கள் சிலையை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் திறந்து வைத்து பேசும்போது குறிப்பிட்டதாவது:**

இந்த நாளில் தமிழகத்தின் வரலாற்றில் மிக முக்கிய மான நிகழ்ச்சியில் நாம் அனைவரும் மிக உணர்ச்சி வசப்பட்டு கிளர்ந்து எழுந்து நிற்கின்ற இந்தப்பேரவையில், நம்முடைய தலைமுறை யின் மிகச்சிறந்த தமிழ்த் தலைமகனாக விளங்குகின்ற கலைஞர் அவர்களுடைய சிலையைத் திறந்து வைக்கவும் உரிய வாய்ப்பளித்த திராவிடர் கழகத்திற்கு என் நன்றி, வாழ்த்து, பாராட்டுகள்.

என்னை இந்தச் சிலையைத் திறந்து வைக்குமாறு கோரிக்கை வைத்த போது வேறு யாரையாவது அழைக்க லாமே என்று நான் பரிந்துரை செய்தேன்.



**ஏற்கமாட்டேன்**

நான் அந்த வகையில் இன்று வாழும் தமிழினத்திற்கும் எதிர்காலத் தமிழினத்திற்கும் சொல்லுகிறேன் என் தமிழினத்தை இரண்டாந்தர மாக்கும் எந்த சமயத்தையும், கடவுள் நம்பிக்கையையும் நான் ஏற்கமாட்டேன்.

சிலைகள் அமைப்பது மட்டுமல்ல; சிலைகளுக்குப் பின்னாலே இருக்கிற சிந்தனைகள் நமக்கு முக்கியமானது.

சிலைகளை விட அதற்குப் பின்னாலே இருக்கிற சிந்தனைகள் முக்கியம் என்று சொல்லுகிற பொழுது கலைஞர் அவர்களை இங்கே சிலையாக மட்டும் பார்க்கவில்லை சிலைக்குப் பின்னாலே இருக்கிற ஒரு புகழ் பாடுகின்ற தமிழினத்தின் வரலாற்றை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு ஆய்ந்து ஓய்ந்ததற்குப் பிறகு மீண்டும் எழுச்சி பெற்று வருகிற ஒரு வரலாற்றைப் பார்க்கிறோம்.

அந்த வரலாற்றை இந்தச் சிலை நமக்குச் சொன்னால் சிலை பயன்பாடு பெறுகிறது.

ஜாதிகள் இல்லையென்று பேசிய அப்பரடிகளைக் கூடத்தான் கோயிலிலே சிலையாக வைத்தார்கள். ஆனால் கொள்கைக்கு குழி தோண்டி வைத்து விட்டு சிலையை வைத்து நாட்டிலே கண்ணைக் கட்டினார்கள்.

அதுபோல தமிழர்கள் நம் உயிரினும் இனிய கொள் கைகளை மதித்துப் போற்றிப் பாராட்டுவதன் மூலம் தான் கலைஞர் அவர்களின் பணிக்கு அய்யா அவர்கள் நமக்கிட்ட பணிக்கு நாம் துணையாக இருக்க முடியும்.

ஆண்டவனை இல்லையென்று சொன்னால் எல்லோரையும் இழுப்பது கடினமாக இருக்கும் என்று சொல்லி 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று கோடானு கோடித் தம்பிகளுக்குச் சொல்லி அணிவகுத்து நிறுத்தியது அண்ணா அவர்கள்; இல்லையென்று சொன்னால், சிலர் ஒதுங்கிவிடுவார்கள் போல் தெரிகிறது; எனவேதான் இதைத் திருமூலர், மூவாயிரம் ஆண்டு களுக்கு முன்பு சொன்னதாகச் சொல்வார்கள். ஆனால் தமிழ்நாட்டு மேடையில்இன்று 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று சொன்னது யாரென்று கேட்டால் திருமூலர் என்று சொல்லத் தெரியாது; அண்ணா சொன்னார் என்று தான் சொல்வார்கள்.

நம்முடைய கலைஞர் இன்னும் ஒருபடி மேலே வளர்ந்தார். காரணம் இவர் ஏழைகளோடு தொடர்புடை யவர்.

'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறோம்', இதை யார் ஆட்சேபிக்க முடியும்? ரொம்ப ஆத்திகரால் கூட ஆட்சேபிப்பது சிரமம்.

'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறோம்' என்ற ஒரு வார்த்தை அது சில பேரை வேறு முகாமுக்குள் போகாமல் திருப்பிக்கொண்டு நம்மிடம் வருகிறது. உள்ளே கொண்டு வந்து விட்ட பிறகு எந்தப் பாடத்தை வேண்டுமானாலும் சொல்லிக் கொடுத்துவிடலாம்.

**பெரியார் தந்த எழுச்சி**

நீண்டகாலமாக ஒருமை உணர்ச்சி குலைந்து போன தமிழினத்தில் ஒரு எழுச்சியைக் கொண்டுவந்து பெரியார் எதிர்த்துக் கேட்டார்கள். அண்ணா அவர்கள் அதைத் தொடர்ந்து பாதுகாத்தார்கள். நம்முடைய கலைஞர் அதை மேலும் தொடர்ந்து பாதுகாக்கிறார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் நம்முடைய இன்னாள் பின்னணி வரலாற்றை நன்றாக நினைவூட்டி எழுச்சி பெற வைத்தார்.

அந்தஎழுச்சிபெறுவதற்குப்பின்னணியில் நின்ற சிறுமைகளைச் சுட்டிக் காட்டி அந்தப் பெருமைகள் நம் வாழ்வுக்குப் பயன்படுமா என்று அய்யா அவர்கள் சிந்திக்க வைத்தார்கள்.

பெருமையையும் எண்ணிப்பார்த்தோம் பேரறிஞர் அண்ணாஅவர்கள்மூலம். அந்தப் பெருமையில் மண்டிக்கிடந்த காளான்களையும், நம்மாலே பார்க்க முடிந்தது. அப்படிப்பட்ட காளான்களை அகற்றி விட்டு ஒரு புதிய இன வழிப்பட்ட பாதையை அமைக்க வேண்டுமென்று சொன்னால் நம்முடைய நோக்கில் இந்த அமைப்பில், நம்முடைய தலைமுறையில் கலைஞர் அவர்கள் ஆட்சியின் தலைமையை ஏற்றிருக் கிறார்கள், இப்படிப் பொறுப்பேற்கிறபோது அந்தக் காலத்திலே பள்ளிக்கூடத்திலே போய் கேட்டால் 'இவனுக்குப் படிப்பு வருமா?' என்று கேட்பார்கள்.

**ஒரு தலைப்பட்சமான கதை**

பாரதத்தை எடுத்துக் கொண்டால் கூட ஒரு தலைப் பட்சமான கதையை நாட்டிலே சொல்லிக் கொண்டிருக் கிறார்கள்,

ஏகலைவன் வேடன் அவனுக்குச் சொல்லிக் கொடுக்க துரோணர் மறுக்கிறார். ஆனால் அரண்மனை வீட்டுப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறார். நான் படித்தபோதுகூட ஏகலைவனின் குரு பக்தி குரு பக்தி என்கிறார்கள். பிறகு 'திராவிட நாடு', 'விடுதலை' போன்ற வற்றை என்னைப் போன்றவர்கள் கடந்த பதினைந்து ஆண்டுகளாகப் படித்து கொண்டிருக்கிறோம்.



நம்முடைய தலைமுறையில் கலைஞர் அவர்கள் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற பொழுது

நான் ஏகலைவனைப் பற்றி அன்று எழுதினேன். ஏகலைவனின் குருபக்தி எனக்குப் புரிகிறது. பாராட்டு வணக்கம். ஆனால் துரோகப் புத்தி படைத்த துரோணாச் சாரியாருக்கு என்ன பாடம்?

ஏகலைவனின் குரு பக்தியோடு துரோணாச்சாரியாரின்துரோகப்புத்தியையும் எடுத்துச் சொன்னால் அல்லவா நாட்டுக்கு உண்மை நிலை புரியும். ஆனால் அது சொல்லித் தரப்படுவதில்லை. எது தேவையோ அது மட்டுமே சொல்லித் தருகிறார்கள்.

இன்றைக்குத் தமிழர்கள் ஏராளமான பேர் படிக்கி றார்கள் நிறைய கல்விச் சலுகை பெறுகிறார்கள் உத்தியோக வாய்ப்பை ஏராள மான பேர் பெறுகிறார்கள்,

'என்ன இருந்தாலும் அவன் வேலைக்கு ஆகுமா?' என்று சிலர் கேட்கிறார்கள்,

அய்யாவும் நானும் 'விடுதலை' பத்திரிகை பற்றி விமர்சனம் செய்து கொண்டிருப்போம். இன்னும் நன்றாகச் செய்யலாம் என்று சொன்னபோது, 'யாராவது நல்ல ஆளாகப் போடலாம்; செய்வார்கள். மட்டமாகச் செய்தால் கூட பரவாயில்லை. நம்முடைய ஆள் வளர்ந்தால் நமக்குப் பயனுண்டு' என்று சொல்வார்

**எழுத்தாளர், கவிஞர்**

அப்படியொரு காலமிருந்தது. ஆனால் இவரை விடச்சிறந்த எழுத்தாளர் யார் இருக்கிறார் என்று கேட்கிற அளவுக்குச் சிறந்த எழுத்தாளராகக் கலைஞரைப் பார்க் கிறோம். எழுத்திலே எவ்வளவு சுருக்கு; வாழைப் பழத்திலே, ஊசி ஏற்றுவது போல கேட்கிற வனுக்கும் கோபம் வருவதில்லை குத்தூசியும் நன்றாக இருக்கிறது. அப்படி எழுதுகிற ஆற்றலையும் பெற்றிருக்கிறார்

ஒரு கவிஞராக இருக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக பாவேந்தர் பாரதிதாசன் கனவு கண்டதுபோல தமிழறிந்த சான்றோன் மூத்த அமைச்சராக இருக்க வேண்டும் என்கிற கனவு நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

என்னுடைய மொழி அறிந்த ஒருவன் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதால் அந்த மொழிக்குச் சிறப்பு.

எதையெடுத்தாலும் திருக்குறளைச் சொல்லாமல் பேச முடிவதில்லை இது திருக்குற ளுக்குப் பெருமை!

பாராளுமன்றத்திற்கு அண்ணா போனார். திருக்குறள் பயிலப்பட்டது. பிறகு பாராளுமன்றத்தில் திருக்குறள் பேசப்படுகிறது.

காரணம் தமிழனின் நிலை உயர்ந்தாலும் தமிழும் உயரும்; தமிழ் உயர்ந்து தமிழன் உயர மாட்டான் அண்ணா அவர்கள் சொன்னார் தமிழ் உயர்ந்து தமிழன் உயரமாட்டான்; தமிழன் உயர்ந்தால் தமிழ் உயரும் என்று!

கலைஞர் அவர்கள் இந்தத் துறையில் மிக வல்ல வராக இருக்கிறார். மிகுந்த சுறுசுறுப்பாக இருக்கிறார் சோர்வு என்பது இல்லை என்பது நாடறிந்த உண்மை !

செட்டி நாட்டரசர் சொன்னது போல அவருக்கு ஓயாத பணிகள்.

**துன்பத்தை வெற்றியாக மாற்றியவர்**

நான்கைந்து பிறந்த நாள் விழாவில் அவர் ஏழை களுக்கு நன்மை செய்தபோது நான் ஒரு கட்டுரையில் எழுதிய போது

புத்தரின் துறவுக்குக் காரணம் என்ன சொன்னார் களென்றால், துன்பப் படுகி றவர்களையெல்லாம் பார்த் தார், வாழ்க்கை இவ்வளவு துன்பமாக இருக்கிறதே என்று வேண்டாமென்று சொல்லிப்போனார்.

ஆனால் துன்பத்தைக் கண்ட பொழுது துன்பத்தை எதிர்த்து வெற்றி காண முடியாமல் புத்தர் கூட துறந்து தான் போனாரே தவிர, மாற்று காண முயலவில்லை.

ஆனால் அதே துன்பங்களை அதே மாதிரி நொண்டிகளை பார்வையிழந்தோரை தொழுநோய்ப் பிச்சைக்காரர்களை கலைஞர் சந்திக்கிற பொழுது 'அய்யோ இவ்வளவு துன்பமா வாழ்க்கையில்?' என்று துறந்து போகாமல், இந்தத் துன்பத்தையே வெற்றியாக மாற்ற முடியும் என்ற வகையில் செய்திருப்பது இருக் கிறதே என்னைக்கேட்டால் துன்பத்தைக் கண்டு துறவியாகப்போவதைவிட துன்பத் தையே மாற்றுகிறவன் சிறந்தவன்.

'பசியை ஆற்றுகிறவனைவிட பசியை மாற்றுகிறவன் கெட்டிக்காரன்' என்று திருவள்ளுவர் சொன்னார்,

துன்பத்தை சகித்துக்கொண்டு ஓடி ஒதுங்குகிறவனை விட துன்பத்தையே மாற்றுகின்ற களத்தில் இறங்கி துன்பத்தை மாற்றுவேன், ஒரு புது வரலாறு படைப்பேன் என்கிற வரலாற்றுப் போக்கு இருக்கிறதே அது அவரது வாழ்க்கையில் காண்கின்ற பெரிய மகிழ்ச்சி!

பதவி வந்துவிட்டால், யார் யாரோ பக்கத்தில் வரு வார்கள் அவ்வளவு பெரிய மிட்டாதார்கள், பெரிய மனிதர்கள் வருகிறபோதும் கூட இவ்வளவு பேரையும் தாண்டி எப்படி தொழு நோய்க்காரனின் நினைவு வந்தது; புரியவில்லை? எப்படியோ சமுதாயத்தினுடைய அடித் தளத்து மக்களின் துன்பங்களைப் புரிந்து அதற்கு மாற்றாக திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார்.

**பட்டமளிப்பு விழா**

'தமிழன் உயர்ந்தால்தான் தமிழ் உயரும். தமிழனிட மிருக்கிற ஜாதி இன மாறுபாடுகளின் அடித்தளத்தைக் கண்டுபிடிக்கவேண்டும். உன்னுடைய மொழி உயர்ந்தது என்று மட்டும் மனப்பால் குடித்துக்கொண் டிருக்காதே அதை உலக விஞ்ஞான மொழியாக உயர்த்த முயற்சி செய்; அதற்கு நீ தொண்டு செய்; இதுவரை நீ தமிழால் வாழ்ந்திருக்கிறாய்; நீ தமிழுக்கு என்ன செய்தாய் என்று எண்ணிப்பார், அதைச் செய்யத் தவறினால் நாம் நன்றி மறந்தவர்கள்' என்று சுட்டிக்காட்டினார்.

இந்த அடிப்படை உரிமைகள் சாதாரணமானவைகள் என்று நினைக்கவில்லை. இந்த சொற்றொடர்களை எழுதி கல்வெட்டிலே வைத்தால் அந்த அறிவுரையை உண்மையாகப் பயன்படுத்தினால், தமிழ்நாட்டு மனிதனும் நாளை விண்கலத்தைச் செலுத்துவான் அப்போது அந்த தூண்டுதலைக் கொடுத்தது சென்னை பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் 1975இல் கலைஞரின் உரையின் விளைவாக இந்த முனைப்பு எழுந்தது என்று நிச்சயம் வரலாறு சிறப்பாகச் சொல்லும்.

ஆகவே புதிய பார்வை புதிய எண்ணங்கள் புதிய சிந்தனை அதே நேரத்தில் அடிச்சுவடு மாறாமல் அண்ணா இருந்தால் எப்படி கேட்பார் என்று அஞ்சியே காரியங்களைச் செய்கிறார்.

சில இயக்கத் தலைவர்கள் இறந்து போனார்கள், வரலாற்றுப் புத்தகத்தில் தான் அவர்களின் பெயரைப் பார்க்க முடிகிறது. ஆனால் அண்ணா அமரரான பிறகும் அவர் உயிரோடு இருந்தால் எந்த அளவுக்கு உண்மை யோடு இருப்பார்களோ அது போன்ற தம்பிகளை அண்ணா அவர்கள் பெற்றது உண்மையிலேயே நற்பேறு. அந்த வகையில் திமுகழகத்தை ஆயிரம் மடங்கு பாராட்ட வேண்டும்

செத்து போனால் சுடுகாடு வரைதான் என்பார்கள். அண்ணா அவர்கள் இருந்தபோது இருந்த துடிப்பைவிட நம்பிக்கையைவிட மிக அதிகமாக, அதேபோல அய்யா அவர்கள் இறந்து போன பிறகு அவர் 'ஆன்மா' இருந்தால் கழிந்து கொள்ளுமோ என்று அந்த அடிச்சுவட்டில் முறைபிறழாமல் இவ்வளவு மகத்தான காரியங்களை கலைஞர் செய்து கொண்டிருக்கிறார்.

வளரும் பயிருக்கு மழைபோல வளரும் மனிதர் களுக்குப் பாராட்டு வேண்டும். தமிழனுக்கு இதிலே தரித்திரப் புத்தி அதிகம்.

என்ன செய்துவிட்டாய் என்று கேட்பார்கள். ஆனால் அண்ணா அவர்கள் சின்ன செய்தியையும் பெரிதாகக் கருதுவார்கள்.

கலைஞரின் கட்டுரையைப் படித்தால் பாராட்டிச் சொல்வார்.

**இன உணர்ச்சி பெறுவோம்!**

கலைஞர் சிலையைத் திறக்கும் நேரத்தில் சொல் கிறேன் நாம் தமிழர்கள் என்ற உணர்ச்சியைப் பெற்றே தீரவேண் டும்.

தமிழினத்திலே ஒருவன் இழிவு படக்கூடாது என்பது தான் அய்யா அவர்களின் நோக்கம். அதிலே கலைஞர் அவர்கள் வழியில் நாம் அனைவரும் ஓரினம் என்ற அடிப்படையில் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

'தமிழினம் பெற்றிருக்கின்ற உரிமைகளை நாம் தொடர்ந்து காப்பாற்றுவோம்' என்று சூளுரை எடுத்துக் கொள்ள வேண்டும்.

எந்தவிதமான கவர்ச்சிகளுக்கும் ஆளாகாமல் நாம் கட்டுப்பாடாக இருக்க வேண்டும்,

காரணம்ஒன்றைப் பெறுவது என்பது அருமை யானது; பெற்றதைக் காப்பாற்றுவது அதைவிட அருமையானது என்பதைப்புரிந்து கொண்டு நம்முடைய கலைஞர் அவர்கள் ஆர்வலராக செயல் வீரராக சிந்தனையாளராக எழுத்தாளராக கவிஞராக எல்லாவற்றிற்கும் மேலாக தமிழகத்தின் இந்த நூற்றாண்டின் வரலாற்றை புதுப்பித்து எழுதுகின்ற வரலாற்று சிற்பியாக விளங்குகின்றார், அவரது வரலாறு தமிழினத்தின் வரலாறாக வளங்கொழிக்கும் வரலாறாக புதுமை செழிக்கும் வரலாறாக ஏழாயிரம்த லைமுறைகளுக்குப் பிறகும்கூட நினைத்து நினைத்துப் பார்த்துப் பெருமிதம் அடையத் தக்க வரலாறாக இந்த வரலாறு எழுதப்படும் அவர் எழுதுவார், தொடர்ந்து எழுதுவார் என்ற நம்பிக்கை இருக்கிறது.

யாரும் அவரது காலை இடறி விடாமல் - அவர் பின்னாலே அணிவகுத்துச் சென்றாலே போதுமானது.

இவ்வாறு அவர் பேசினார்.

---

### மணிப்பூரில் அமைதி திரும்ப

# ஒன்றிய அரசு முழு கவனம் செலுத்த வேண்டும்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜூன் 24 -

மணிப்பூர் மாநிலத்தில் அமைதி திரும்ப வேண்டும். அதற்கு ஒன்றிய அரசு முழுமையான கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தி 'தினகரன்' நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:-


தினகரன்
ஜூன் 23, 2023 வெள்ளிக்கிழமை
அமைதி திரும்ப வேண்டும்

நமது உடம்பில் ஏதாவது ஒரு பகுதியில் சின்ன காயம் ஏற்பட்டாலும், அது உடல் முழுக்க தீராத பாதிப்பை ஏற்படுத்திவிடுகிறது. அதே போன்று தான் வடகிழக்கு மாநிலமாக இருந்தாலும் மணிப்பூரில் வன்முறை, கலவரம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் போது நாடு முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. மே 3ம் தேதி தொடங்கிய குக்கி இன மக்களின் போராட்டம் தீவிரமடைந்து கொண்டே போகிறது. பெரும்பான்மையினராக உள்ள மைத்தேயி சமூகத்தினரை பழங்குடியின வகுப்பில் சேர்க்கும் அரசின் போக்கை கண்டித்து அவர்கள் வன்முறையில் இறங்கியுள்ளனர். இதுவரை 120

நமது உடம்பில் ஏதாவது ஒரு பகுதியில் சின்ன காயம் ஏற்பட்டாலும், அது உடல் முழுக்க தீராத பாதிப்பை ஏற்படுத்திவிடுகிறது. அதே போன்று தான் வடகிழக்கு மாநிலமாக இருந்தாலும் மணிப்பூரில் வன்முறை, கலவரம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் போது நாடு முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. மே 3ம் தேதி தொடங்கிய குக்கி இன மக்களின் போராட்டம் தீவிரமடைந்து கொண்டே போகிறது. பெரும்பான்மையினராக உள்ள மைத்தேயி சமூகத்தினரை பழங்குடியின வகுப்பில் சேர்க்கும் அரசின் போக்கை கண்டித்து அவர்கள் வன்முறையில் இறங்கியுள்ளனர். இதுவரை 120 பேருக்கு மேல் உயிரிழந்துவிட்டனர். ஒன்றியத்திலும், மணிப்பூரிலும் பாஜ ஆட்சி இருந்தும் டபுள் இன்ஜின் அரசின் எந்தவொரு நடவடிக்கையும் அம்மாநிலத்தில் அமைதியான சூழலை ஏற்படுத்தவில்லை. நிலைமை கைமீறி சென்றுவிட்டது என்று தற்போது தான் ஒன்றிய அரசு உணர்ந்துள்ளது. மக்கள் பிரதிநிதிகளின் வீடுகள், உடமைகள் அடித்து நொறுக்கி தீக்கிரை யாக்கப்பட்டுள்ளன.

உரிமைக்காக போராடுகின்றவர்களை விட உரிமை பறி போனதால் எழுந்துள்ள போராட்டத்துக்கு எப்போதும் வீரியம் அதிகம். ராணுவத்தினர், அதிரடிப்படையினர் மணிப்பூரில் குவிக்கப்பட்டுள்ளனர். இருந்தாலும் கலவரத்தை கட்டுக்குள் கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்த பா.ஜ. அரசால் முடியவில்லை. இந்நிலையில் தான் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அனைத்துக்கட்சி கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள் ளார். மணிப்பூர் மாநில நிலவரம் குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்படுகிறது. குறிப்பாக ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட இருக்கிறது. மணிப்பூர் வன்முறையால் தங்கள் வீடு, உடைமைகளை அப்படியே விட்டு 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அங்கிருந்து வெளியேறிவிட்டனர். மணிப்பூரில் நடந்து வரும் தொடர் வன்முறையால் பா.ஜ. ஆட்சியை கலைக்க வேண்டும் என்று காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பி வரும் நிலையில் அனைத்துக்கட்சி கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. மணிப்பூர் கலவரம் மனதை நொறுக்குகிறது. சகோதரத்துவ உணர்வை வளர்க்க அளப்பரிய நம்பிக்கையை உருவாக்க வேண்டியுள்ளது. ஆனால் வெறுப்பையும், பிரிவினையையும் தூண்டிவிட ஒரு தவறான செயல் போதும்.

மணிப்பூரில் ஒருவருக்கொருவர் நல்லிணக்கமாக வாழ்ந்த மக்கள் இன்று எதிர் எதிராக நின்று மோதிக்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. மணிப்பூர் என்னும் அழகிய மண்ணில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் கொண்டு வாருங்கள் என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியாகாந்தி கேட்டுக்கொண்டுள்ளார். மணிப்பூருக்கு இதுவரை ஒன்றிய அமைச்சர்கள் யாரும் சென்று பார்வையிடவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூற வில்லை. தகவல் பரிமாற்றம் நடக்காமல் இருக்க இணைய தளவசதிதுண்டிக்கப்பட்டுள்ளது. சிரியா, லிபியா போன்று மணிப்பூர் மாநிலம் மாறுவதற்கு முன்பு மக்களை காப்பாற்றுங்கள் என்று ஓய்வுபெற்ற ராணுவ வீரரின் கதறல் நெஞ்சை உருக்குவதாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். மக்களுக்கு வழங்கிய உரிமை களை பறிக்க நினைப்பதும், ஒடுக்க நினைப்பதும் பெரிய மக்கள் புரட்சியாக மாறிவிடும் என்பதற்கு மணிப்பூர் உதாரணமாகிவிட்டது. எனவே, ஒன்றிய அரசு முழு கவனம் செலுத்தி அம்மாநிலத்தில் அமைதியை திரும்ப கொண்டுவர வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகும்.

இவ்வாறு தினகரன் தலையங்கம் எழுதியுள்ளது.

---

### ஈரோடு தெற்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர்

# ஆ.செந்தில்குமார் தாயார் ஆ.பொன்னம்மாள் மறைவு!

*ஈரோடு, ஜூன் 24-*

*ஈரோடு தெற்கு மாவட்டக் கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார் தாயாரும், ஈரோடு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஆயாவும், காலஞ்சென்ற பாலுசாமி (எ) கு.ஆறுமுக முதலியார் மனைவியுமான திருமதி ஆ.பொன்னம்மாள் வயது 87. வயது மூப்பின் காரணமாக 17.6.2023 சனிக்கிழமை மாலை 6.15 மணியளவில் ஈரோடு திண்டல் தெற்கு பள்ளம் ரோடு, லட்சுமி கார்டனில் உள்ள அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்கிற செய்தியினை அறிவிக்க வருந்துகிறோம். அம்மையாரின் மறைவுச் செய்தியறிந்த மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், ஊராட்சி, வார்டு, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், சமுதாய பெரியோர்கள் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.*



மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ரூ.20 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல ஒப்புயர்வு மையத்திற்கான கட்டுமானப் பணிகளை வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில் தொடங்கி வைத்த போது எடுத்தபடம். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையாளர் பிரவீன்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, (மதுரை வடக்கு), முன்னாள் மேயர் பெ.குழந்தைவேலு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வ.வேலுச்சாமி, சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் (மதுரை தெற்கு), ஆ. வெங்கடேசன் (சோழவந்தான்), மாவட்ட ஊராட்சி தலைவர் சூரியகலா கலாநிதி, துணை மேயர் நாகராஜன் மற்றும் மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.